7 - 117

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING**

## SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY, 2013

# PSC 2.11 CONSTITUTIONAL DEVELOPMENT IN SRI LANKA

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

---

01. "இலங்கையில் அரசியலமைப்புகள் பல. ஆனால் நன்கு உறுதியடைந்த ஒரு அரசியலமைப்புவாதத்தை இன்னும் அடைய வேண்டியுள்ளது." பலமாக வேரூன்றிய ஓர் அரசியலமைப்புவாதம் இலங்கையில் விருத்தியுறுவதனைப் பலவீனப்படுத்துவதில் பாதிப்புச் செலுத்திய காரணிகள் யாவை?

(20 புள்ளிகள்)

02. உமது கருத்துப்படி இலங்கை நிறைவேற்றுப் பிரதம மந்திரியுடன் மந்திரி சபை அரசாங்க முறைக்கு மாற வேண்டுமாயின் மேற்கொள்ள வேண்டிய அரசியலமைப்பு ஏற்பாடுகள் யாவை?

(20 புள்ளிகள்)

03. இலங்கை அரசியல் திட்ட அபிவிருத்தியில் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் வழங்கப்பட்ட சர்வஜன வாக்குரிமையின் முக்கியத்துவத்தினைப் பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

04. 1947ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின்கீழ் வழங்கப்பட்ட சிறுபான்மையோருக்கான காப்பீடுகளை நுணுக்கமாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பின் கீழ் பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

(i) யாப்பு உருவாக்கத்திற்கான பின்னணிக் காரணிகள்
(ii) யாப்பின் சிறப்புப் பண்புகள்

(2X10=20 புள்ளிகள்)

06. (i) இலங்கையின் தற்போதய பிரதிநிதித்துவ முறையில் நீர் அவதானிக்கும் பிரதிகூலங்கள் யாவை?

(ii) அவற்றை நிவர்த்தி செய்வதற்கு நீர் முன்வைக்கும் ஆலோசனைகள் யாவை?

(2X10=20 புள்ளிகள்)

07. "இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் அண்மைக்காலமாக அபாயத்துக்குட்பட்டுள்ளது," நீர் ஏற்பீரா? உமது விடைக்குக் காரணங்கள் தருக.

(20 புள்ளிகள்)

08. பின்வரும் எவையேனும் இரண்டிற்குச் (02) சிறுகுறிப்புக்கள் தருக.

(i) 1978 அரசியலமைப்பின் கீழ் மொழி உரிமைக்கான, ஏற்பாடுகளும் அவற்றின் நடைமுறையும்

(ii) தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டமும் அரசியலும்

(iii) 2007 சர்வகட்சி மாநாடும் அதன் பரிந்துரைகளும்

(iv) இலங்கை அரசியலில் இடதுசாரிகளின் தற்போதய நிலை

(2X10=20 புள்ளிகள்)